I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE
DEPOSITIONS OF WITNESSES
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
DEPOSITIONS OF WITNESSES P.W.1
M.C.O.P.NO.221/2023

| | | |
|---|---|---|
| Name | : | Mohanapriya |
| Husband Name | : | Sivakumar |
| Age | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06/11/2024

**குறுக்கு விசாரணை-2 வது எதிர்மனுதாரர் தரப்பில்**

நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை. என் மாமியார் பானு காலமாகிவிட்டார். என் கணவர் ஓட்டிய லாரி பின்னால் சென்ற லாரி. முன்னால் சென்ற லாரி மீது மோதி விபத்து நடந்தது என்று கேள்விப்பட்டேன். என் கணவர் மாதம் 35 ஆயிரம் சம்பாதித்ததற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் வங்கி ஸ்டேட்மெண்ட் தாக்கல் செய்துள்ளேன். EMJAY STEEL COMPANY ல் டிரைவராக வேலை செய்தார். சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். இந்த விபத்து என் கணவர் தான் வேகமாக வண்டியை இயக்கி சென்று முன்னால் சென்ற வாகனத்தை மோதிவிட்டார் என்றால் சரியல்ல. முன்னால் சென்ற வண்டி பிரேக் பிடித்ததால் விபத்து ஏற்பட்டது என்று கேள்விப்பட்டேன். நான் கேட்கும் தொகை அதிகமென்றால் சரியல்ல. என் கணவருக்கு ஏதாவது இழப்பீடு தரவேண்டுமென்றால் 4 வது இன்சூரன்ஸ் கம்பெனி தான் தரவேண்டும் என்றால் தெரியாது. வேலையால் இழப்பீடு நீதிமன்றத்தில் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை.

**குறுக்கு விசாரணை–4 வது எதிர் மனுதாரர் தரப்பில்**

என் மனுவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் என் கணவர் ஓட்டி சென்ற லாரி முன்னால் சென்ற லாரி TN 52 0780 வாகன ஓட்டுநரின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் இந்த விபத்து ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் தகவல்(ம.த.சா.ஆ.1) அறிக்கை மற்றும் குற்றப்பத்திரிக்கை(ம.த.சா.ஆ.6) அதேபோல் தான் சொல்லப்பட்டுள்ளது. இந்த

விபத்தே லாரி எண் TN 52 0780 அதன் ஓட்டுநரின் அஜாக்கிரதையால் இந்த விபத்து நடந்த காரணத்தினால் அந்த லாரியின் ஓனர் மற்றும் இன்சூரன்ஸ் கம்பெனி அதாவது 1 மற்றும் 2வது எதிர் மனுதாரர்கள் தான் இழப்பீடு தொகை கொடுக்க கடமைப்பட்டவர்கள் ஆவார் என்றால் ஆமாம். அதேபோல் என் கணவர் மாதம் ரூ.35 ஆயிரம் சம்பாதித்தார் என்பதற்கு வங்கி கணக்கு தாக்கல் செய்துள்ளேன். இந்த விபத்தில் 3 மற்றும் 4வது எதிர்மனுதாரர் என் கணவர் ஓட்டுநராக பணிபுரிந்த லாரி உரிமையாளர் மற்றும் அதன் காப்பீட்டு நிறுவனம் தான் இழப்பீடு தர கடமைப்பட்டவர்கள் அல்ல என்றாலும் அவர்களுக்கு எதிராக மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றாலும் சரியல்ல.

மேலும் மனுவில் சொல்லப்பட்டுள்ள இறந்தவரின் வயது, மற்றும் வருமானத்தை நிரூபிக்க நான் தகுந்த ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வேலையாள் இழப்பீட்டு நீதிமன்றத்தில் நான் மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் கேட்டிருக்கும் இழப்பீடு தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று ஒப்புக் கொண்டு கையெழுத்திட்டார்.

G SANTHI Digitally signed by G SANTHI
Date: 2024.11.06 19:08:08 +0530

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.